# வேதாகமவியல் (பாடம் - 2)

**Bible** தேவவார்த்தை என்பதற்கு ஆதாரம்

1. புறம்பான தெளிவுகள் (External Proofs)
2. உள்ளான தெளிவுகள் (Internal Proofs)

வேதாகமம் தேவனுடைய வெளிப்படுத்தல், வேதம் முழுவதும் தேவனுடைய வசனம் என்று உரிமைபாராட்டுகிறது. ஒருபிழையும் இல்லாமல் நாம் தேவனை பூரணமாக நம்புவதற்கும், அறிவதற்கும் ஆண்டவர் வேதாகமத்தை நமக்கு கொடுத்திருக்கிறார்.

1. புறம்பானதெளிவுகள்: **(External Proofs)**

(i) ஏறத்தாழ 40 வித்தியாசமான நபர்கள் 1600 வருடங்களாக பல இடங்களில் வைத்து ஒருவரோடொருவர் கலந்தாலோசிக்காமல் எழுதிய 66 புத்தகங்களின் தொகுப்பே வேதாகமமாகும். இந்தபுத்தகம் இன்று ஒன்றோடொன்று பிரிக்கமுடியாமல் ஒரேபுத்தகமாக தோற்றமளிக்கிறது. இந்த 40 எழுத்தாளர்களில்,

a. ராஜமந்திரி (தானியேல்)
b. சேனைத்தலைவர்கள் (மோசே, யோசுவா)
c. மேய்ப்பர்கள் (ஆமோஸ், தாவீது)
d. வேதசாஸ்திரி (எஸ்ரா)
e. செம்படவர்கள் (பேதுரு, யோவான்)
f. வைத்தியர் (லூக்கா)
g. பட்டதாரி (பவுல்)

முதலிய அநேக ஆட்கள் இருந்தார்கள். ஆனாலும் கருத்துக்களில் எந்தவிதமான வேற்றுமையும் இன்றி ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாகவும் இப்புத்தகம் காணப்படுகிறது. ஆகவே வேதாகமத்தின் ஆசிரியர் தேவன் என்பதை அறிந்துகொள்ளலாம்.

(i) வேதாகமமானது 2196 (வேதாகமத்தின் ஏதாவது ஒருபகுதியாவது)க்கும் மேலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு

வருடாவருடம் லட்சக்கணக்கில் பிரதிகள் விநியோகிக்கப்படுகிறது. வேறு புத்தகங்களுக்கு இல்லாத பெருமை இப்புத்தகத்திற்கு சிறந்துகாணப்படுகிறது.

(ii) இப்புத்தகத்தின் சரித்திரம் ஆச்சரியமாயிருக்கிறது. வேதத்திலுள்ள முதல் புத்தகங்கள் 4000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருக்கின்றன. தோல் சுருள்களில் எழுதப்பட்ட இப்புத்தகங்கள் அழிந்துபோகாமல் காக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் சிதறடிக்கப்பட்டும், சத்துருக்களால் அழிக்கப்பட்டும் அழிந்துபோகாமல் காக்கப்பட்டது தேவனுடைய கிருபையும் இப்பத்தகத்தின் பெருமையுமாகும்.

(iii) யாராலும் மறுக்க முடியாத சரித்திர உண்மைகள் இப்புத்தகங்களில் எங்கும் பார்க்கிறோம். புராணங்களோ, கட்டுக் கதைகளோ இப்புத்தகத்தில் இல்லை.

(iv) இப்புத்தகம் சென்ற இடங்களிலெல்லாம் மனிதனுக்கு பாவஉணர்வும், சுபாவம் மாறுதலுக்கும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் ஏற்பட்டுள்ளது.

(v) வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் ஒன்று தவறாமல் நிறைவேறியதாலும், நிறைவேற்றப்பட்டுவருவதாலும் அது தேவனுடைய வசனமென்று தெளிவுபடுத்துகிறது.

(vi) இப்புத்தகத்தில் நாம் காணும் இரட்சிப்பின் திட்டம் (பலியின் மூலம்) மனித ஞானத்தினாலே கண்டுபிடிக்கப்பட்டது அல்ல.

## Historical Proofs

1) **நாத்திகனின் தீர்க்கதிசனம்**

பிரான்ஸ் தேசத்தில் வால்டேர் என்ற ஓர் நாத்திக தத்துவவாதி ஒருவன் இருந்தான். அவன் கடவுள் இல்லை என்று கூறியதோடு ஒழித்துக்கட்ட முயற்சிகள் எடுத்தான். “வேதாகமம் ஓர் புரட்டுப் புத்தகம்” இதை அடியோடு ஒழித்துக்கட்டவேண்டும். இது மனிதனின் கண்களை குருடாக்குகிறது. இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் உலக பழக்கத்திலிருந்து வேதாகமத்தை அழித்து, ஒழித்து ஓர் செல்லாக்காசாக மாற்றிவிடுவேன் என்றான். ஆனால் நடந்தது என்னவென்று தெரியுமா?

வால்டேர் மரித்து ஐம்பது ஆண்டுகள் ஆவதற்குள்ளாக 1979-ம் ஆண்டில் ஜெர்மன் நாட்டு வேதாகம ஐக்கியசங்கம் அவன் வசித்துவந்த வீட்டை

விலைக்கு வாங்கினார்கள். அந்த வீடு இன்று ஆயிரக்கணக்கான வேதாகமங்களை அச்சிட்டு அனுப்பும் கருவூலமாக இருக்கின்றது.

**“கர்த்தருடைய வார்த்தை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கின்றது”**
**“பாதாளத்தின் வாசல்கள் அவைகளை மேற்கொள்ளுவதில்லை”**

உலகத்திலேயே அதிகமான மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அதிகமானவிற்பனையான, விற்பனையாகிக் கொண்டிருக்கிற ஒரேபுத்தகம் வேதாகமமே. உலகிலுள்ள எல்லாநாடுகளிலும் அவர்கள் பேசுகின்ற எல்லாபிரதான மொழிகளிலும் வெளிவந்து வாசிக்கப்படும் ஒரேபுத்தகம் வேதாகமமே.

2) கம்ப்யூட்டர் சொல்கிறது

வானஆ ராய்ச்சியாளர்கள் என்ற “CRAY-t3D” சூப்பர் கம்ப்யூட்டரை உபயோகித்து வானமண்டலத்தின் துவக்கத்தை ஆராயமுற்பட்டபோது “வெறுமையினின்று, ஒழுங்கின்மையினின்றும்” தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்ற வேதாகமத்தின் கூற்று உண்மையென்று கண்டறிந்தார்கள். பல நூற்றாண்டுகளாக நாம் விசுவாசித்து வரும் இந்த உண்மையை விஞ்ஞானம் இப்போதுதான் கண்டுபிடித்துள்ளது. உலகம் சிருஷ்டிக்கப்பட்டதை விஞ்ஞானம் இப்போது ஒத்துக்கொள்கிறது. மெசப்பொத்தோமியாவிலிருந்து நாகரிகம் தோன்றியதையும், இயேசுவின் மரணம் வரை உள்ள சகலசம்பவங்களையும் உலகசரித்திரம் ஒத்துக்கொள்ளுகிறது. அதன்பின் இன்றுவரை நடந்தவைகளைச் சபையின் சரித்திரமும், உலகசரித்திரமும் ஒத்துக்கொள்ளுகின்றன. இவ்வாறிருக்க வேதாகமம் கூறும் “உலகத்தின் முடிவும்” ம்பவிக்கத்தான் போகிறது என்பதில் என்ன சந்தேகம்?

3) வேதம் உயிர்ப்பிக்கிறது

(மறைந்த பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனைப் பெற்று, தூக்கிலிடப்பட்ட பால்பீர்சிங் அனுபவம்)

“எனக்குத் தூக்குத் தண்டனை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது, **சிறைச்சாலையில் அடைக்கப்பட்டேன். சிறை அதிகாரிகளிடம் கேட்டு ஒருவேதாகமம் பெற்றுக்கொண்டேன்.** அதைதினமும் படித்துவந்தேன். அது

தினமும் என்னை உயிர்ப்பித்தது. என் நினைவுகள் இயேசுகிறிஸ்துவின் மீது பதிந்தன. இயேசுகிறிஸ்து குற்றமற்றவர். ஆயினும் நீதிமன்ற விசாரணையில் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டார். நானும் மரணத்திற்கானயாதொரு குற்றமும் செய்யவில்லை. ஆயினும் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளேன். இயேசுகிறிஸ்துவின் இறுதிவாழ்க்கை என்னை உற்சாகப்படுத்தியது. வேதாகமம் என்னை சிறைச்சாலையில் உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தி காத்துக் கொண்டது" என்றான். (1988 **ஆகஸ்டு மாதம் 8ம் தேதி Indian Express பத்திரிக்கையில் வந்தசெய்தி**)

4) **இரஷ்யாவில் வேதாகமம்**

இரஷ்யா கம்யூனிசத்தின் இரும்புக் கரங்களில் தவழ்ந்தகாலம் அது. வேதாகமம் கிடைப்பது மிகஅரிது. இருந்த ஓரிரு வேதகமத்தை அநேகர் படிக்கவேண்டும். ஆகவே வேதாகமத்தின் தாள்களை கிழித்து பரிமாற்றம் செய்து ஒவ்வொருவராகப் படித்துவந்தனர். இந்தசெயல் இரஷ்யாவில் பெரும் மாற்றம் செய்தது. மக்கள் உயிர்ப்பிக்கப்பட்டனர். அநேகர் ஜெபித்தனர். அல்லேலூயா! கர்த்தர் இறங்கினார். இரும்புத் திரைகளை கிழித்தெறிந்தார். இன்று இரஷ்யாவில் திருச்சபை வேகமாகப் பரவிவருகின்றது. வேண்டுமளவுக்கு வேதாகமம் கொடுக்க வேதாகம சங்கங்கள் சிறந்த முயற்சி எடுத்துவருகின்றது.

"வேதம் என் மனமகிழ்ச்சியாய் இல்லாதிருந்தால் நான் என் துக்கத்திலே அமிழ்ந்துபோயிருப்பேன்".

## II. உள்ளானதெளிவுகள்: (Internal Proofs)

உள்ளான தெளிவுகளை இரண்டாக வகுக்கலாம்.

1. பழைய ஏற்பாட்டிலுள்ள தெளிவுகள் (O.T. Pfoofs)
2. புதியஏற்பாட்டிலுள்ள தெளிவுகள் (N.T. Proofs)

**(i) பழையஏற்பாட்டிலுள்ள தெளிவுகள்:**

a. மோசேக்கு தேவன் வெளிப்பட்டு தமது சித்தத்தை அறிவித்தார், என்ற மோசே கூறியிருக்கிறார். யாத்.3:4, உபா.34:10-12.

b. எல்லாத் தீர்க்கதரிசிகளும் தங்கள் வசனங்களை தேவனுடைய வசனமென்று கூறியிருக்கிறார்கள். கர்த்தர் சொல்கிறார் என்று 3800 தடவைகளுக்குமேல் பழையஏற்பாட்டில் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது.

c. தாவீது தன்னோடு தேவன் பேசினார் என்று உரிமைபாராட்டுகிறார். 2 சாமு. 23:1-3.

d. பழையஏற்பாடு, தேவனுடைய வசனமென்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார். மத்.5:17,18, 22:31, மாற்.7:8-10, லூக்.16:29-31.

e. அப்போஸ்தலர்கள், பழையஏற்பாடு தேவனின் வசனமென்று கூறியிருக்கிறார்கள். 1 பேதுரு 1:10, 11, 2 பேது.1:21, அப்.1:16. அப்.28:27, எபி.6:17, 2 தீமோ.3:16.

**(ii)** புதியஏற்பாட்டு தெளிவுகள்:

1. ஆவியானவரின் ஏவுதலும், நினைப்பூட்டுதலும், ஞானமும் அப்போஸ்தலருக்கு கர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

யோவான்.14:25, 26, 16:13, தேவன் நினைப்பூட்டினதினால் சுவிசேஷம் எழுதினார்கள். போதித்ததினால் நிருபங்கள் எழுதினார்கள். வரப்போகிற காரியங்களை அறிவித்ததினால் (வெளி.4:1) இயேசுவின் வருகையைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும் எழுதினார்கள்.

2. புதியஏற்பாட்டின் எழுத்தாளர்கள், தேவ ஆவியானவரின் ஏவுதலும், வெளிப்படுத்தலும் தங்களுக்கு இருந்தது என கூறுகிறார்கள்.

பவுல்: 1 கொரி.2:9-10, 14:37, கலா.1:12, எபே.3:3-5, 1 தீமோ.4:1.

பேதுரு: 1 பேது.1:12.

யோவான்: வெளி. 1:1, 14:13, 19:9, 4:1.

புதியஏற்பாட்டின் எழுத்தாளர்களை தேவன் சிலவிஷயங்களை எழுதவேண்டாம் என்று பரிசுத்த ஆவியானவரால் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். எபி.5:11, 9:5, 11:32, யூதா.3, அப்.16:6-7.

3. சுவிசேஷங்கள் வேதவாக்கியங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1 பேது.1:25.

வேதவாக்கியங்கள் தேவ ஆவியானவரால் அருளப்பட்டது என்பதில் நாம் அறியவேண்டி சிலமுக்கிய விஷயங்கள்.

**அ.** தேவ வாக்கியங்கள் குறைவற்றது. ஆனால் வேதாகமத்தை எழுதினவர்கள் குறைவுள்ளவர்கள். ஆயினும் குறைவுள்ள மனிதர்கள் தேவ ஆவியானவராலே ஏவப்பட்டு ஒருகுறைவும் இல்லாத தேவவசனத்தை நமக்கு எழுதிக் கொடுத்தார்கள்.

**ஆ.** வேதாகமத்தைத் தவிர இதர புத்தகங்கள் தேவனால் அருளப்பட்டதென்று சொல்லமுடியாது. இன்று புதியசத்தியங்களை யாருக்கும் தேவன் வெளிப்படுத்துவது இல்லை. ஏற்கனவே வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள சத்தியங்கள் மூலம் ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்திதருகிறார். புதியஎற்பாட்டின் இறுதி புத்தகமாகிய வெளிப்படுத்தினவிசேஷம் எழுதி முடிந்ததும் தேவன் சபைக்கு கொடுக்கும் வெளிப்படுத்தல்கள் முற்றுப் பெற்றது.

**இ.** 66 பத்தகங்களில் ஒன்று வேறு ஒன்றைவிட அதிகமான ஆவியானவரின் ஏவுதல் உடையது என்றுசொல்ல இடமில்லை. எல்லா புத்தகங்களிலும் ஆவியானவரின் நிறைவு காணப்படுகிறது. "தேவன்" யேகோவா என்ற வார்த்தையே இல்லாத எஸ்தரின் புத்தகம் கூட மற்றப் புத்தகங்களைப்போல ஆவியின் நிறைவுடையதாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## கேள்விகள்:

1. வேதாகமம் தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான வெளிபிரகாரமான ஆதாரங்கள் என்னென்ன என்பதனை சற்று விளக்கமாக கூறுக.
2. வேதாகமமம் தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான உள்ளான ஆதாரங்கள் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை விளக்கமாக எழுதுக.